தமிழ்நாடு தகவல் ஆணையம்
பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035.
தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 18.11.2026
காணொளி காட்சி விசாரணை

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA 13164/A/2024

திரு. M. பக்கீர் முகமது .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கறம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் – 622 302. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 18.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. M. பக்கீர் முகமது அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேசிய தகவல் மையத்தின் (NIC) காணொளி காட்சி அரங்கிலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ந.முருகேசன், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கறம்பக்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 06.12.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கிளாங்காடு கிராமத்தில் பட்டா எண் 785இல் மனுதாரருக்கு சொந்தமான இடம் வேறொருவருக்கு பட்டா மாறுதல் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அறிக்கையின் நகல் கோரி தகவல்களை வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர், 01.07.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 08.10.2024 நாளிட்ட பிரிவு 19(3)-ன் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.. அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 18.11.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து காணொளி காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ஏற்கனவே 10.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மனுதாரர் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, கறம்பக்குடி சரகம், கிளாங்காடு கிராம புல எண்: 148/5 இல் பட்டா மாறுதல் செய்யப்பட்டது தொடர்பான தகவல் கோரியது தொடர்பாக மனுதாரரரை நேரில் அழைத்து பேசப்பட்டு, மனுதாரர் மேற்படி பட்டா மாறுதல் தொடர்பாக தனது குடும்பத்தாருடன் ஜமாத் முன்னிலையில் பேசிதீர்த்துக் கொண்டோம் எனத் தெரிவித்து, மேற்படி வழக்கினை எவ்வித மேல்விசாரணை மற்றும் பிற நடவடிக்கையின்றி முற்றாக்கம் செய்யக் கோரி ஒப்புதல் கடிதம் அளித்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் கால தாமதமாக தகவல் வழங்கியுள்ளதாகவும், தனது மனுவின் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கவில்லை என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் தான், முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொண்டதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, மனுதாரரின் ஒப்புதல் கடிதத்தின் பேரில், இம்மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA–13164/A/2024

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கறம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் – 622 302.

மனுதாரர்:
திரு. M. பக்கீர் முகமது,
அருத்தோடிப்பட்டி,
காடம்பட்டி அஞ்சல்,
கறம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் – 622 302.

Copy to File
Je/PA 19.11.2026

23 NOV 2026

DESPATCHED